

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று (27.10.2025) சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் சுவர் இடிந்து விழுந்து நர்சிங் மாணவி இறந்த நிலையில், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று மாணவியின் குடும்பத்திற்கு ரூ.6 லட்சம் நிதி வழங்கினார். உடன் சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், மாநகர செயலாளர் உதயசூரியன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் விவேகன்ராஜ், வர்த்தக அணி வனராஜ் ஆகியோர் இருந்தனர்.

### தீப்புண் காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைக்காகவே தன் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிட்டு மானுடத்துக்குப் பெரும் தொண்டாற்றியவர்!

# சேவையும், அறிவியல் நோக்கும் நிறைந்த வாழ்க்கையினால் பலருக்கு உதவியவர் மருத்துவர் - திருமதி. மாதங்கி ராமகிருஷ்ணன்!

## மறைவுக்கு — முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

**சென்னை, அக். 28–**

**மருத்துவர் 'பத்மஸ்ரீ' மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:**

புகழ்பெற்ற ஒட்டுறுப்பு அறுவை (Plastic Surgery) மருத்துவர் 'பத்மஸ்ரீ' மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

திருமதி. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பு பயின்று முடிக்கும்போதே தங்கப்பதக்கங்கள் முதலிய ஏராளமான பதக்கங்களோடு பட்டம் பெற்ற சிறப்புக்குரியவர் ஆவார். ஒட்டுறுப்பு அறுவை மருத்துவத்தில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்ற மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் கீழ்ப்பாக்கம்



மருத்துவக் கல்லூரியில் (KMC) தீவிர தீப்புண் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுவதில் முதன்மையான பங்காற்றியவர் என்பது அவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்கது.

தனது மருத்துவப் பணிகளுக்கான அங்கீகாரமாக பத்மஸ்ரீ, டாக்டர் பி.சி. ராய் விருது, தமிழ்நாடு அரசின் அவ்வையார் விருது முதலிய பல்வேறு விருதுகளைத் திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் பெற்றுள்ளார்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் துறைத் தலைவர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தில் மிகை நிலைப் பேராசிரியர், மத்தியத் தோல் ஆராய்சி நிறுவனத்தில் (CLRI) மிகைநிலை அறிவியலாளர் உள்ளிட்ட பல பொறுப்புகளில் திறம்படச் செயல்பட்ட திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள், தீப்புண் காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைக்கா கவே தன் வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்டு மானுடத்திற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

சேவையும், அறிவியல் நோக்கும் நிறைந்த வாழ்க்கையினால் பலருக்கு உதவிய திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது மகள் மரு. ப்ரியா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், மருத்துவத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு முன்னீர் பள்ளத்தில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

*நெல்லை.அக்.28-*

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நெல்லைக்கு இன்று (28ம் தேதி) வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு இரவு 830 மணி அளவில் முன்னீர் பள்ளத்தில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தென்காசியில் 29 ம் தேதி நடைபெறும் அரசு நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நெல்லையில் இன்று (28 ம்



தேதி) நெல்லை கிழக்கு மாவட்டம் சார்பில் எல்லையான முன்னீர் பள்ளத்தில் இரவு 830 மணி அளவில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும், வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றியும், பாக முகவர்கள் குறிப்பேடு பணிகள் குறித்தும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இவ்வாறு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ், மாவட்ட துணைச் செயலாளர் நம்பி, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, எரிக்ஜூடு, சேவியர் செல்வ ராஜா, அலெக்ஸ் அப்பாவு, போர்வல் கணேசன், சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, பி.சி.ராஜன், வேலங்குளம் கண்ணன், சுபாஷ் தங்கபாண்டி, நகர செயலாளர் மணிசூரியன், பேரூர் செயலாளர்கள் ஜான் கென்னடி, அயூப்கான், கசமுத்து, சேதுராமலிங்கம், தமிழ்வாணன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மல்லிகா அருள், மாடசாமி, முருகன், எஸ்.என். முருகன், கேசவன், ஜோசப் சந்திரன், பணகுடி ராமலிங்கசுவாமி அறங்காவலர்குழு தலைவர் அசோக்குமார், ஆதிபாண்டி, இசக்கிபாண்டி, வேல்த்துரை, சரவணன், ஆதிபரமேஸ்வரன், ஜார்ஜ், ஆனந்த், சுரேஷ், சுரேஷ் பாக்கியம், ஐ.ஆர்.ரமேஷ், தனபால், மாடசாமி, சந்திரன், நடேஷ், இலங்காமணி, ராஜா, தனபால், கண்ணன், பொன் இசக்கி, மந்திரம், லட்சுமணன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்படபலர் கலந்துகொண்டனர்.




இதய அஞ்சலி

கழக துணை அமைப்பு செயலாளர்
திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர்
வழக்கறிஞர் ப.தாயகம்கவி M.A., B.L., M.L.A.,
அவர்களின் தாயார்

திருமதி. ப.சௌந்தரிஅம்மாள்
வயது : 97

27.10.2025 அன்று **இயற்கை எய்தினார்.**
அம்மையாரின் இறுதி ஊர்வலம் 28.10.2025 அன்று
மதியம் 2.00 மணிக்கு 15/9 தலையாரி தெரு
மேற்கு மாம்பலம் சென்னை – 33–ல் உள்ள
இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மாபேட்டை
இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.

மாண்புமிகு அமைச்சர்
**மா.சுப்பிரமணியன்**
மக்கள் நல்வாழ்வு துறை

**எம்.கிருஷ்ணமூர்த்தி** MC **எம்.ஸ்ரீதரன்** MC
சைதை **மா.அன்பரசன், ந.தமிழரசு, த.சம்பத்**

பிரிவால் வாடும்... தென்றல் **தினேஷ்** | வழக்கறிஞர் **தமிழ்வேல்**